# கோயம்புத்தூர் முதன்மை மாவட்ட நீதிமன்றம்

## வேலை வாய்ப்பு அறிவிப்பு

கோயம்புத்தூர் மாவட்ட நீதித்துறையில் தமிழ்நாடு நீதித்துறை அமைச்சுப் பணிகளில் காலியாகவுள்ள கீழ்க்கண்ட பதவிகளுக்கு தகுதியான நபர்களை நியமனம் செய்யும் பொருட்டு தகுதித் தேர்வு நடைபெற உள்ளது. அந்தப் பதவிகளுக்கு கீழ்க்கண்ட தகுதி உடையவர்கள் உரிய சான்றிதழ்களின் ஜெராக்ஸ் நகல்களில் சுய சான்றொப்பமிட்டு (self attestation) விண்ணப்பத்துடன் இணைத்து தபால் மூலம் மட்டும் கீழே குறிப்பிடப்பட்ட அலுவலக முகவரிக்கு அனுப்ப கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். சான்றிதழ்களின் சரிபார்த்தலின் அடிப்படையில் தகுதித் தேர்வுக்கு இந்நீதிமன்ற இணையதள வலைத்தளத்தின் மூலம் அழைக்கப்படுவோர் மட்டும் தகுதித் தேர்வில் கலந்து கொள்ளலாம்.

வயது வரம்பு (01.07.2018 அன்று)

(அ) குறைந்தபட்ச வயது வரம்பு : 18 வயது நிறைவடைந்தவராக இருத்தல் வேண்டும்.

(ஆ) உச்ச வரம்பு :

| வ. எண். | விண்ணப்பதாரர்களின் இனசுழற்சி வகைகள் | குறைந்த பட்ச வயது | அதிகபட்ச வயது |
|---|---|---|---|
| 1 | ஆதிதிராவிடர், ஆதிதிராவிடர் (அருந்ததியர்கள்), பழங்குடி வகுப்பினர் மற்றும் அனைத்து வகுப்புகளையும் சார்ந்த ஆதரவற்ற விதவைகள்) | 18 வயது | 35 வயதுக்குள் |
| 2 | மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்∴ சீர்மரபினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (முஸ்லீம்) | | 32 வயதுக்குள் |
| 3 | ஏனையோர் (அதாவது ஆ.தி., ஆ.தி (அ), ப.வ., மி.பி.வகு.∴சீ.ம., பி.வ. மற்றும் பி.வ.(மு) ஆகிய வகுப்பினைச் சாராதவர்கள்) | | 30 வயதுக்குள் |

வயது வரம்பு சலுகைகள் நடைமுறையிலுள்ள அரசு ஆணைகள் அரசு விதிமுறைகளின்படி செயல்படுத்தப்படும்.

**பதவியின் பெயர்** : **கணினி இயக்குபவர்** (Computer Operator)

1. காலிப்பணியிடங்கள் : 4 எண்ணிக்கை

2. சம்பள ஏற்ற முறை : ரூ.26100-65500 (level 10)

3. கல்வித்தகுதி : அங்கீகரிக்கப்பட்ட ஏதாவதொரு பல்கலைக்கழகத்தில் கணினி அறிவியல் (Computer Science / Computer Applications) இளங்கலைப் பட்டம், அல்லது இளங்கலைப்பட்டம் - பி.ஏ (அல்லது) பி.எஸ்.சி (அல்லது) பி.காம் உடன் கணினியில் பட்டயப்படிப்பு.

4. தொழில்நுட்பத் தகுதி : அரசு தொழில் நுட்பத் தட்டச்சு தேர்வில் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் இளநிலை தேர்ச்சி.

5. காலியிடப்பகிர்வு (இன சுழற்சி முறை) - (3 முதல் 6 வரை)

| | |
|---|---|
| 1. | மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் (பொது) முன்னுரிமை பெற்றவர்கள். |
| 2. | பிற்படுத்தப்பட்டோர் (பிற்படுத்தப்பட்ட முஸ்லீம்கள் தவிர) முன்னுரிமை பெற்றவர்கள். |
| 3. | பொதுப்போட்டி (பெண்கள்) (ஆதரவற்ற விதவைகள்) (முன்னுரிமையற்றவர்கள்) |
| 4. | ஆதிதிராவிடர் (பொது) முன்னுரிமை பெற்றவர்கள். |

**கடைசி நாள்** : விண்ணப்பங்கள் (ஒரு பாஸ்போர்ட் அளவு புகைப்படம் உரிய இடத்தில் ஒட்டப்பட்டு உரிய சுயசான்றொப்பத்துடன் (self attestation) அனைத்து கல்விச்சான்றிதழ்கள் மற்றும் முன்னுரிமைக்கான சான்றிதழ்கள் (ஊனமுற்றோர், ஆதரவற்ற விதவை மற்றும் கலப்புத் திருமணம் மற்றும் பிற) மற்றும் பிற சான்றிதழ்களின் நகல்கள் உரிய சுயசான்றொப்பத்துடன் கீழ்க்காணும் முகவரிக்கு **02.02.2018** ஆம் தேதி மாலை 5.45 மணிக்குள் சுய விலாசமிட்ட ரூ.30.∴- (ரூபாய் முப்பது மட்டும்) அஞ்சல் வில்லை ஒட்டிய உறையுடன் (26cmx10cm) அளவுள்ளது) இணைத்து இவ்வலுவலகத்திற்கு கிடைக்குமாறு தபாலில் அனுப்ப வேண்டும்.

**முதன்மை மாவட்ட நீதிபதி**
**முதன்மை மாவட்ட நீதிமன்றம்,கோயம்புத்தூர்-641018.**

(காலதாமதமாக வரும் விண்ணப்பங்கள் எக்காரணம் கொண்டும் பரிசீலிக்கப்படமாட்டாது)

மேற்கண்ட நியமனத்திற்குத் தகுதியான நபர்களை தேர்வு செய்யவோ, நேர்காணலை ஒத்தி வைக்கவோ, நியமன அறிக்கையை எவ்வித முன்னறிவிப்புமின்றி ரத்து செய்யவோ முதன்மை மாவட்ட நீதிபதி, கோயம்புத்தூர் அவர்களுக்கு முழு அதிகாரம் உள்ளது.

இத்துடன் தெரிவிக்கப்பட்டுள்ள விண்ணப்பதாரர்களுக்கான அறிவுரையை தவறாது படித்து பின்பற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. சொல்லப்பட்டுள்ள அறிவுரைகள் பின்பற்றப்படாமல் இருக்கும்பட்சத்தில் பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிப்புக்கு உள்ளாக்கப்படும்.

கோயம்புத்தூர்
நாள் :05.01.2018

முதன்மை மாவட்ட நீதிபதி,
கோயம்புத்தூர்.

## விண்ணப்பதாரர்களுக்கான அறிவுரைகள்

1. விண்ணப்பங்கள் வரையறுக்கப்பட்ட படிவத்தில் பூர்த்தி செய்யப்பட்டு தபால் மூலமாக மட்டுமே அனுப்பப்பட வேண்டும்.

2. அனைத்து சான்றாவணங்களின் நகல்கள் மட்டுமே உரிய முறையில் சுய சான்றொப்பம் (self attestation) செய்யப்பட்டு விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டு அனுப்பப்பட வேண்டும். எக்காரணம் கொண்டும் அசல் சான்றவாணங்கள் இணைக்கப்படக்கூடாது. உரிய சான்றாவணங்களின் நகல்கள் இணைக்கப்படாத நேர்வுகளில் அந்த விண்ணப்பங்கள் எந்தவித முன்னறிவிப்பும் இன்றி நிராகரிக்கப்படும்.

3. முழுமையாக பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் மற்றும் தவறான தகவல்கள் கொண்டுள்ள விண்ணப்பங்கள் முற்றிலும் நிராகரிக்கப்படும்.

4. முன்னுரிமை கோரும் நேர்வுகளில் முன்னுரிமைக்கான உரிய சான்றிதழ்களின் நகல் இணைக்கப்பட வேண்டும். தவறும் பட்சத்தில் அந்த விண்ணப்பம் முற்றிலும் நிராகரிக்கப்படும்.

5. விண்ணப்பதாரரின் கையொப்பம் இல்லாத விண்ணப்பங்கள் மற்றும் விண்ணப்பிக்கும் பதவி குறிப்பிடப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

6. பாஸ்போர்ட் அளவு புகைப்படம் விண்ணப்பத்தில் உரிய இடத்தில் ஒட்டப்பட்டு உரிய சுய சான்றொப்பத்துடனும் (self attestation) விண்ணப்பங்கள் அனுப்பப்பட வேண்டும். மேலும் சுய சான்றொப்பம் தவிர வேறு எந்தவிதமான சான்றொப்பம் பெறத் தேவையில்லை. இருப்பினும் விண்ணப்பதாரர்கள் நேர்முகத் தேர்வின்போது அனைத்து அசல் சான்றிதழ்கள் மற்றும் ஆளறிச் சான்றிதழ் உடன் கலந்து கொள்ள வேண்டும். விண்ணப்பதாரர்கள் ரூ.30/- (ரூபாய் முப்பது மட்டும்) அஞ்சல் வில்லை ஒட்டிய சுய விலாசமிட்ட உறையுடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

7. விண்ணப்பதாரர்கள் விண்ணப்பத்தை அனுப்பும்போது ஒரு தபால் உறையில் ஒரு விண்ணப்பம் மட்டுமே அனுப்பப்பட வேண்டும். இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள் ஒரே தபால் உறையில் வைத்து அனுப்புதல் கூடாது.

8. **அனைத்து தகவல் பரிமாற்றங்களும், தேர்வு/நேர்காணலுக்கான அழைப்பு (ecourts.gov.in/tn/coimbatore) என்ற இணையதள வலைதளத்தில் மட்டுமே தகவல்கள் வெளியிடப்படும். வேறு எந்த வகையான முறையிலும் விண்ணப்பதாரருக்கு தனிப்பட்ட முறையில் தகவல்கள் தெரிவிக்கப்படமாட்டாது. எனவே விண்ணப்பதாரர்கள் தொடர்ந்த மேற் கூறிய இணையதள வலைதளத்தை தொடர்ந்து கவனித்து தகவல்களை அறிந்து கொள்ளுமாறு தெரிவிக்கப்படுகிறது.**

PRINCIPAL DISTRICT COURT, COIMBATORE

(Employment Notification)

Applications are invited from the eligible candidates for the following posts in Tamil Nadu Judicial Ministerial Service in Civil Courts of Coimbatore District. Hence the eligible candidates may apply for the under mentioned post in the prescribed format along with copies of all the testimonials and certificates duly **self attested** to this office address mentioned below by **post only**. After scrutinizing the applications, the eligible candidates list will be informed in this court's website and those eligible candidates are alone allowed to appear for the examination held.

Age as on 01.07.2018 :

(a) Minimum age limit :- Should have completed 18 years of age

(b) Maximum age limit :-

| Sl.No | Category of Candidates | Minimum age limit | Maximum age limit |
|---|---|---|---|
| 1. | Scheduled Caste / Scheduled Caste (Arunthathiyars), Scheduled Tribes and Destitute Widows of all casts. | 18 Years | Below 35 years |
| 2. | Most Backward Classes/ De notified Communities, Backward Classes and Backward Classes (Muslims) | | Below 32 years |
| 3. | "Others" (i.e., Candidates not belonging to SCs, SC(A)s, STs, MBCs/DCs, BCs and BCMs). | | Below 30 years |

Age relaxation concession will be made with reference to the existing Government Rules / Government Orders.

| | **Name of the Post** | : | **Computer Operator** |
|---|---|---|---|
| 1. | No. of Vacancy | : | 4 Nos |
| 2. | Scale of Pay | : | Rs. 26100-65500 (Level 10) |
| 3. | Educational Qualification | : | a pass in Bachelor's degree in Computer Science/Computer Applications from a recognized University of Indian Union or a Bachelor's degree in B.A., or B.Sc., or B.Com., from a recognized University of Indian Union with a Diploma in Computer Applications from a recognized University. |
| 4. | Technical Qualification | : | Typewriting Junior Grade (English and Tamil). |

5. Roster Turns for the Vacancies (from 3 to 6)

| | |
|---|---|
| 1. | Most Backward Class and De notified Communities (Priority) |
| 2. | Backward Class (Other than BC Muslims) Priority |
| 3. | General Turn (Women) (Destitute Widows) (Non Priority) |
| 4. | Schedules Caste (Priority) |

Last Date: All the applications, with passport size photos affixed and duly self-attested on the Right margin of the application, in the space provided, as mentioned should be submitted along with self attested copies of all educational certificates , priority certificates if any ( Physically challenged, Destitute Widow, Inter-caste marriage & others )and other certificates on or before **02.02.2018** till 5.45 p.m. along with a self addressed envelope (26cmx10cm in size) by affixing Postal Stamp for Rs.30/- (Rupees Thirty only) to the under mentioned address ;

**The Principal District Judge,**
**Principal District Court, Coimbatore – 641018.**

(The applications received after the last date will not be entertained under any circumstances)

The Principal District Judge, Coimbatore has been vested with the authority to select the qualified and eligible candidates, to postpone the interview, if circumstances need to annul the advertisement without any prior intimation.

The applicants are strictly instructed to follow the instructions issued along with this notification. Failure in following the instructions will lead to the rejection of the application.

Place : Coimbatore.
Date : 05.01.2018

Principal District Judge,
Coimbatore.

## **Instructions to the Candidates**

1. All applications should be submitted in the prescribed format through post only.

2. Only copies of certificates should be submitted along with the application and all the copies of certificates should duly be self attested by the applicant. Original Certificates need **not** be sent along with the applications. The applications received without copy of certificates will be rejected without any prior intimation.

3. All the columns in the application should be duly filled in and incomplete applications will be summarily rejected. If any of the claims of the applicant is found to be false, the candidature of the applicant will be cancelled without any notice.

4. Applicants who intend to claim priority, the copy of certificate with regard to the priority should be enclosed with the application. Failure to adhere the same will lead to the rejection of the application.

5. The unsigned applications and the applications not mentioning the post for which applied will lead to the rejection of the application.

6. The recent Passport size photograph of the candidates affixed on the application should be **self attested** by the applicant. All the copies of certificates should duly be self attested. There is no need to get attestation from any Gazetted Officer or any other authority, but the candidates should submit all the original certificates, testimonials and proof of identity at the time of interview. The applicants are informed to enclose a self addressed envelope (26cmx10cm in size) by affixing Postal Stamps for Rs.30/- (Rupees Thirty only).

7. A postal cover sent by an applicant should contain only one application. More than one application should not be sent in a postal cover.

8. **All further communications / Memo/ Intimation for interview should be made only through website ecourts.gov.in/tn/coimbatore .No communication will be sent to the applicants individually, other than the communication made in the website, and so the applicants are advised to observe further communication in the website.**